# பொருளாதார வேலைத்திட்டம் குறித்து பொது மேடையில் விவாதிக்கவருமாறு ஜேவிபி க்கு அழைப்பு விடுக்கின்றோம்!

## எதிர்க்கட்சி அலுவலகத்தில் நளின் எம்.பி. பகிரங்கச் சவால்



நாட்டின் எதிர்கால பொருளாதார வேலைத்திட்டம் குறித்து பொது மேடையில் விவாதிக்க வருமாறு மக்கள் விடுதலை முன்னணியினருக்கு (ஜேவிபி) சவால் விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து தெரிவித்தார்.

ஐக்கிய பொருளாதார குழுவின் உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம், ஹெரான் விக்ரமரத்ன ஆகியோருடன் விவாதிக்க வருமாறு ஜே.வி.பியின் சுனில் ஹந்துன்நெத்தி போன்றோரிடம் பல தடவைகள் அழைப்பு விடுத்தும் அவர்கள் விவாதத்திற்கு முன்வராமல் நழுவிச் செல்கின்றனர் என நளின் பண்டார எம்.பி குறிப்பிட்டார்.

பொருளாதாரம் தொடர்பில் சரியான வேலைத்திட்டம் இல்லாத காரணத்தினாலேயே, ஜே.வி.பி யினர் பகிரங்க விவாதத்திற்கு வருவதில்லை எனவும், தானும் கட்சியும் இது ஏழாவது தடவையாக ஜேவிபி யினருக்கு 2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 16 வெள்ளிக்கிழமை 29.03.2024 கதிர் 215

# கோட்டாபயவைக் கொண்டு வந்து நாம் மிகவும் அவமானப்பட்டோம்!

## முன்னாள் சகா கம்மன்பில சீற்றம்



ராஜபக்ஷக்களுடன் இனி அரசியல் பயணம் கிடையாது என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

"கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கி கசப்பான பாடத்தை கற்றுக்கொண்டுள்ளோம். எனவே, இனியும் தனிநபர்களை மையப்படுத்தியதாக எமது அரசியல் பயணம் அமையாது." - என்றும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது - 2➤

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது

## மஹிந்த தேசப்பரிய திட்டவட்டம்



கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்கள் போராட்டம் வெடிக்கும் என்பதால் தேர்தலை ஒத்திவைப்பதற்குரிய முயற்சிகள் இடம்பெறமாட்டாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- 2➤

# அரச நிறைவேற்று அதிகாரிகளின் சங்கம் வேலை நிறுத்தத்திற்கு தயாராகின்றதாம்!

அரச நிறைவேற்று அதிகாரிகளை பாதித்துள்ள சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பிரச்சினைக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை வழங்க வேண்டும் என அரச நிறைவேற்று அதிகாரிகளின் ஒன்றிணைந்த குழு தெரிவித்துள்ளது.

குறித்த திகதிக்கு முன்னதாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை வழங்கத் தவறினால்,ஏப்ரல் மாதம் முதல் வாரத்திற்குள் இரண்டு (02) வாரங்களுக்கு அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தமது சங்கம் தீர்மானித்துள்ளதாக அரச நிறைவேற்று அதிகாரிகளின் ஒன்றிணைந்த குழுவின் தலைவர் எல். உதயசிறி குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அரச நிறைவேற்று அதிகாரிகளின் ஒன்றிணைந்த குழுவில் அரச சேவையிலுள்ள 18 தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-104)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நானும் தயார் என்னால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும்!

## சம்பிக்க ரணவக்க எம்.பி. சூளுரை



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் அக்கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டிற்கான ஒன்றிணைந்த நடவடிக்கையான ஐக்கியக் குடியரசு முன்னணியின் கொள்கைப் பிரகடனம் தொடர்பில் தற்போது நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் மற்றும் அரசியல் குழுக்களுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

எதிர்காலத்தில் நாம் ஓர் அரசியல் கூட்டணியை உருவாக்குவோம். 2➤

# இரண்டு பிள்ளைகளின் தாய் அடித்துக்கொலை

## வீட்டில் தனியாக இருந்த வேளை கொடூரம்

இரத்தக் காயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கடுவலையில் வீட்டில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடுவலை நகரில் பணிபுரிந்து வரும் அஜந்தா என்ற 51 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயாரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது கணவர், மகள் மற்றும் மகன் ஆகியோர் காலையில் வேலைக்குச் சென்ற நிலையில், மேற்படி பெண் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

இந்நிலையில், சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் தலையின் பின்புறத்தில் பலத்த 2➤

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடமாட்டார் என்பது உறுதி

## கம்மன்பில சொல்கின்றார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்பது உறுதி என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

"படுதோல்வியைத் தவிர்ப்பதற்காகவே முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு பஸில் ராஜபக்ஷ கோருகின்றார். ஆனால், எந்தத் தேர்தல் நடந்தாலும் மொட்டுக் கட்சியால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாது." - என்றும் உதய கம்மன்பில கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"மொட்டுக் கட்சிக்கு ஆதரவு உள்ளது, மக்கள் உள்ளனர் என்றெல்லாம் அக்கட்சியினர் மாயையை உருவாக்கி வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வி ஏற்படும் என்பது பஸிலுக்குத் தெரியும். எனவே, ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்பட்டால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு வேலை செய்வதற்கு எவரும் இருக்கமாட்டார்கள். அதனால் மொட்டுத் தரப்பினருக்கு மேலும் பின்னடைவு ஏற்படும். இதனாலேயே நாடாளுமன்றத்தில் சில ஆசனங்களைத் தக்கவைத்துக்கொள்ள முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தல் கோரப்பட்டுள்ளது. இரண்டாவது அரச ஊடகம் மற்றும் அரச அதிகாரிகள், பொலிஸார் ஊடாக ஏதேனும் ஒத்துழைப்பைப் பெறலாம் என பஸில் கருதுகின்றார். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் இந்த ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற மாட்டாது. அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்பது உறுதி." - என்றார். (அ)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## ஜனாதிபதித் தேர்தலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவொரு அரசியல் கூட்டணி மட்டுமல்ல, நாட்டைக் கட்டியெழுப்பும் கூட்டணி. அந்தக் கூட்டணியின் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு என்னிடம் கேட்டுக்கொண்டால் அந்த சவாலை நான்

## ஜனாதிபதித்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கவே முடியாது. அதனைச் செய்வதாயின் அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியம். அதற்கு உயர்நீதிமன்றத்தின் அனுமதி அவசியம். நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இதற்கிடையில் அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் மக்கள் வன்முறையற்ற அமைதிப் போராட்டத்தில் இறங்குவார்கள். நானும் முதலில் சட்டத்தை நாடுவேன். அதன்பின்னர் போராட்டம் செய்வேன். எனவே, அப்படியான முயற்சி இடம்பெறாது என்றே தோன்றுகின்றது.

அதேவேளை, நான் அரசியல் செய்வேன். ஆனால், தேர்தல் அரசியலில் ஈடுபடமாட்டேன். ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் அல்ல பிரதேச சபை தேர்தலில்கூட போட்டியிட மாட்டேன்.” - என்றார்.

(அ)

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுக்கும் அழைப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார். இப்படித்தான் ஜே.வி.பி யினர் இலங்கையின் அரசியல் மேடைகளில் ஒரு கருத்தையும் கெனடா, இந்தியா போன்ற நாடுகளில் இன்னொரு கருத்தையும் முன்வைத்து புதிய தலைமுறையினரை ஏமாற்றி வருகின்றனர். மக்கள் சக்தியின் இந்த விவாத அழைப்பை ஏற்காவிடின் ஜே.வி.பிக்கு பொருளாதார வேலைத்திட்டம் இல்லை என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொள்வார்கள் எனவும் நளின் எம்.பி. மேலும் தெரிவித்தார். (ரெம-102)

## கேட்டாபயவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் எமது கூட்டணி அறிவிக்கப்படும். 2015 இல் மஹிந்த சூறாவளி எனும் நடவடிக்கையை ஆரம்பித்தோம். அது தனிநபரை மையப்படுத்திய பயணம். இனியும் அவ்வாறு செயற்படத் தயாரில்லை.

தனிநபர்களை மையப்படுத்திய அரசியல் பயணத்தால் இரு கசப்பான பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. எமது எதிரணி மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிக்குக் கொண்டு வந்து கசப்பான பாடத்தையும், கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வந்து கசப்பான பாடத்தையும் கற்றுக்கொண்டுள்ளோம்.

தர்மத்தின் வழியில் வேலைத்திட்டம் மற்றும் கொள்கைகளையே நாம் தலைமைத்துவமாகக் கருதிச் செயற்படுவோம். ராஜபக்ஷக்களுடன் இனி அரசியல் பயணம் கிடையாது.”- என்றார். (அ)

ஏற்றுக்கொள்வேன்.

என்னிடம் ஓர் அணி உள்ளது. என்னால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பதில் உறுதியாக உள்ளேன்” என்றார். (ரெம-103)

## இரண்டு பிள்ளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காயம் மற்றும் அவரது முகத்தில் கீறல்கள் உள்ளன என்றும், அவர் அணிந்திருந்த தங்க ஆபரணங்களும் காணாமல்போயுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி பெண் வழமையாக முற்பகல் 11 மணியளவில் வேலைக்குச் செல்பவர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வீட்டில் திருடுவதற்காக வந்த யாரேனும் தாக்கியதால், அந்தப் பெண் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# அரிசிக்குத் தட்டுப்பாடு வருமா?

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அரிசியின் விலையை அதிகரிப்பதற்கு நெல்தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்து வருவதாக சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் காரணமாக, எதிர்காலத்தில் நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என்று சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தநிலையில், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கு விதிக்கப்பட்டிருந்த 65 ஷரூபா விசேட பண்ட வரி, 1 ஷரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எனினும், பாரிய நெல் தொழிற்சாலை உரிமையாளர்கள் 90 தொடக்கம் 100 ஷரூபா வரையிலேயே, ஒரு கிலோ நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர் என்று சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)

# பணவீக்கம் குறைந்தது!

*கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையில் இலங்கையின் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 0.9 சதவீதமாகக் குறைந்துள்ளமை தெரியவந்துள்ளது.*

*இது முந்தைய மாதத்தில் 5.9 சதவீதமாகப் பதிவாகியிருந்தது.*

*இருப்பினும், உணவுப் பணவீக்கம் பெப்ரவரியில் 3.5 சதவீதத்தில் இருந்து 3.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.*

*இதேவேளை, பெப்ரவரியில் 7 சதவீதமாக இருந்த உணவுப் பொருள் அல்லாத பணவீக்கம் மார்ச் மாதத்தில் 0.5 சதவீதமாகக் குறைவடைந்தமையே இம்மாதத்தில் பணவீக்கம் குறைந்ததற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.*

# ஆட்சி முறையில் மாற்றம் வேண்டும்

**– கொழும்பு பேராயர் இல்லம் கோரிக்கை**

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஆட்சி முறை கட்டாயம் மாற்றப்பட வேண்டும் என்று கொழும்பு பேராயர் இல்லத்தின் பொதுச்செயலாளர் அருட்தந்தை ஜே.டி. அந்தோனி ஜெயக்கொடி வலியுறுத்தியுள்ளார்.

பெரிய வெள்ளி தினத்துக்காக அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

“நாடு கடுமையான சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வேளையில் இன்று பெரிய வெள்ளி கொண்டாடப்படவுள்ளது. மக்களின் துன்பங்களைக் குறைக்க நாட்டின் ஆட்சி அமைப்பில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். இது அனைத்து குடிமக்களின் பொறுப்பு.” - என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று ஐந்து ஆண்டுகளை அண்மித்துள்ள போதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை என்றும் கொழும்பு பேராயர் இல்லத்தின் பொதுச்செயலாளர் விசனம் தெரிவித்துள்ளார். (அ)

# முட்டையின் விலை அதிகரிக்கப்படாது

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை முட்டையின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் ரத்னஸ்ரீ அழககோன் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் மாதமொன்றுக்கு 6 இலட்சம் கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“முட்டையின் விலை 35 ரூபாவாகக் குறைந்தால் சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

கடந்த 2023ஆம் ஆண்டு, அரசு அதிகமான கோழிகளை இறக்குமதி செய்துள்ளது.

இதன் விளைவாக, 2025ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முட்டைகளினதும் கோழிக் குஞ்சுகளினதும் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.” - என்றார். (அ)

# எச்.ஐ.வி. தொற்றாளர்கள் இந்த வருடம் அதிகரிப்பு

கடந்த வருடத்தை விட எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரித்துள்ளது என்று தேசிய எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டோரே எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகின்றமை அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கலை இலக்கிய நிகழ்வு திருகோணமலையில்

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் ஏற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கலை, இலக்கிய ஆற்றல்களை ஊக்குவிக்கும் நோக்குடனான நிகழ்வு கோப் நிறுவனத்தால் நடத்தப்படும் விசேட தேவையுடைய பாடசாலையில் புதன்கிழமை (27) இடம்பெற்றது.

இந்நிகழ்வு திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வின் தொடக்கவுரையை நூலக உதவியாளர் அ. அச்சுதன் வழங்க, வரவேற்புரையை நூலகர் திருமதி. மு.லெ. றிம்சானா வழங்கினார்.

செயலாளரின் தலைமையுரையும் கோப் நிறுவனத்தின் பணிப்பாளரின் சிறப்புரையும் இடம் பெற்றன.

நிகழ்வில் நன்றியுரையை நூலக உதவியாளர் பா.விபூஷிதன் வழங்கினார்.



நிகழ்வில் நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் எச்.எம்.திலினி சந்தமாலி, பிரதம நூலகர் ந. யோகேஸ்வரன், நூலக உதவியாளர் உ.ரஜனிக்காந், கோப் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கிருஸ்னி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் மகளிர் தின நிகழ்வு

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் மகளிர் தின நிகழ்வு இன்று சிறப்பாக நடைபெற்றது.

கூட்டுறவுச்சங்கத்தின் 155 ஆம் கட்டை வளாகத்திலுள்ள மண்டபத்தில் சங்கத்தின் செயலாளர் கு.சித்திரபானு தலைமையில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட ஓய்வு நிலை அரசாங்கதிபர் றூபாவதி கேதீஸ்வரன் பங்கேற்றார்.

நிழ்வின் விருந்தினர்களாக சங்கத்தின் தலைவர் சு.யதீஸ்வரன், சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள், ,பொதுமுகாமையாளர் உள்ளிட்ட சங்க பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஓய்வு நிலை மாவட்ட அரசாங்கதிபர் றூபவதி கேதீஸ்வரன் அரசாங்க அதிபராக இருக்கும் போது சங்கத்திற்கு ஆற்றிய சேவைகளுக்காக சங்க உறுப்பினர்களால் கௌர விக்கப்பட்டார். (02)







# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவுச்சுரங்கம் பொது அறிவுப் போட்டி




(எம்.எம்.றம்ஸீன்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடாத்திய அறிவுச்சுரங்கம் பொது அறிவுப் போட்டியில் 5 பாடசாலைகள் பங்கேற்றன.

மருதமுனை ஸம்ஸ் மத்திய மகா வித்தியாலய மருதூர்கனி விரிவுரை மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி அறிவுச் சுரங்கம் போட்டியில் மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி இரண்டாம் சுற்றின் முடிவில் 10 புள்ளிகள் வித்தியாசத்தில் 51 புள்ளிகளைப் பெற்று இறக்காமம் அல் - அஷ்ரஃப் மத்திய கல்லூரியை வெற்றி கொண்டது.

# சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தில் இயேசுவின் பாடுகளை காட்டும் திருச்சிலுவைப் பாதை



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பெரும் திருத்தலமான சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தில் இயேசுவின் பாடுகளை நினைவுகூரும் திருச்சிலுவைப் பாதை நிக பெரிய வெள்ளிக்கிழமையான இன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்கள் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை நினைவுகூரும் வகையில் சிலுவைகளை சுமந்தவாறு 6ஆம் கொளனி அந்தோனியார் ஆலயம் மற்றும் வீரமுனை சந்தி ஆகியவற்றிலிருந்து நடைபவனி மேற்கொண்டு சம்மாந்துறை சொறிக்கல்முனை பிரதான வீதிவழியாக திருத்தலத்தை வந்தடைந்தனர்.

சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தின் பங்குத் தந்தை சுலக்சன் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் உள்ளிட்ட நாட்டின் நாலாபுறமிருந்தும் மக்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றினார்கள்.

இதற்கமைவாக இன்று இரவு 7 மணிக்கு இயேசுவின் பாடுகளை திருப்பாடுகளின் காட்சிகள் திருத்தல வளாகத்தில் (பாஸ்கா) இடம்பெறவுள்ளது.

இயேசு நாதர் அறையப்பட்டு மரணித்த திருசிலுவையின் ஒரு பகுதி இந்தியாவிலுள்ள கோவை நகரிலிருந்து எடுத்துவரப்பட்டு சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தில் பாதுகாக்கப்பட்டு வருவது இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும்

# கல்முனை இஸ்ஸாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் விழிப்புணர்வு நிகழ்வு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் "பாராட்டத்தக்க சிறுவர்களை எவ்வாறு உருவாக்குவது" என்பது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம். றிஷாத் தலைமையில் இடம்பெற்றது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.கே.காமிலாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பி .ஜெனிதா மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.சாஜித் , இந்நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்த ஆசிரியை ஜனாபா மர்ஜ/ன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ‘நடுக்கடலில் மூழ்கும் நாடொன்று உள்ளது’ என இந்த இரத்தின துவீபத்தை குறிப்பிட வேண்டியேற்பட்டமை ஒரு தேசிய சோகம்’

## மாதாந்தம் 26,000 பேர் நாட்டை விட்டு செல்கின்றனர் என்கிறார் டலஸ் எம்.பி.

‘8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் அதிகபட்ச ஆயுட்காலம் 193 நாட்களாகும்’ என சுதந்திர மக்கள் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று (28) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, “இலங்கையின் தேசிய வருமானத்தில் 31 சதவீத வீத வருமானம் 1 சதவீதமாக உள்ள உள்ள உயர்மட்ட மக்களின் கைகளிலும், தேசிய வருமானத்தில் 64 வீத வருமானம் 10 வீதமாக உள்ள மேல் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் கைகளிலும் சென்றடைகின்றது,

50 வீதமாக உள்ள கீழ் மட்ட மக்களின் கைகளில் தேசிய வருமானத்தில் ஒரு அற்பத் தொகையான 4 வீதமான சொச்சமே சென்றடைகின்றது என்பது தெளிவாகின்றது. தேசத்தின் மீது ஒரு கல்லறை அடையாளம் விழுந்துள்ளதையே இது காட்டுகின்றது.

மேலும், மக்களின் விரக்தி நிலை உச்சத்தை எட்டியுள்ளது. ஒவ்வொரு 12 மணி நேரத்திற்கும் ஒரு தற்கொலை சம்பவம் நிகழ்வதாக அறிக்கைகள் காட்டுகின்றன. ஒவ்வொரு மாதமும் இருபத்தி ஆறாயிரம் (26,000) பேர் இந்த நாட்டை விட்டு வெளியேறுவதன் மூலம் இதனை புரிந்து கொள்ள முடியும். இவை நமது தனிப்பட்ட புள்ளிவிபரங்கள் அல்ல. புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் விபரங்கள் இவை.

‘நடுக்கடலில் மூழ்கும் நாடொன்று உள்ளது’ என்று இந்த இரத்தின துவீபத்தை குறிப்பிட வேண்டி யேற்பட்டமை தேசிய சோகம் என கூற வேண்டியுள்ள போதிலும், மூழ்கும் கப்பலில் இருந்து குதிக்கும் கலையை புரிந்து கொண்டுள்ள அரசியல்வாதிகளுக்கு இதில் ஆபத்து இல்லை” என்றார்.

(ரெம-107)



# மூவாயிரம் பொது சுகாதார அதிகாரிகள் உணவு சோதனையிடும் கடமையில்



புத்தாண்டு காலப்பகுதியில் சந்தைகளை கண்காணித்து சோதனையிடுவதற்காக நாடளாவிய ரீதியில் மூவாயிரம் பொது சுகாதார பரிசோதகர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். இதுவரை நடத்தப்பட்ட சோதனைகளின் போது புத்தாண்டு பண்டிகை கால விற்பனைக்காக தயாரிக்கப்பட்ட பல உணவு மாதிரிகள் சோதனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெம-108)

# கடன் மறுசீரமைப்பு சிக்கலை இரண்டாவது காலாண்டில் சாதகமாகத் தீர்க்க முடியும்!

**- நிதி இராஜாங்க அமைச்சர்**



இலங்கைக்கு கடன் வழங்கியவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதால் இரண்டாம் காலாண்டில் கடன் மறுசீரமைப்பு சிக்கலை சாதகமாகத் தீர்க்க முடியும், என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தென் சீனாவில் இடம்பெற்ற போவா மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இலங்கை எதிர்நோக்கும் கடன் மறுசீரமைப்புச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் , இதன்காரணமாக இலங்கை எதிர்நோக்கும் சவால்களை தீர்க்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், லண்டனில் தற்போது இடம்பெற்று வரும் முறியாளர்களுடனான கலந்துரையாடல்களில் சாதகமான பெறுபேறுகளை எதிர்பார்ப்பதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (04)

# சிவனொளிபாதமலையில் இருந்து விழுந்த வெளிநாட்டு இளைஞர்!

*இரத்தினபுரி - சிவனொளிபாதமலை வீதியின் எஹலகனுவ பிரதேசத்தில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் பாதுகாப்பு வேலியில் இருந்து சுமார் 100 மீற்றர் ஆழமான பள்ளத்தில் விழுந்துள்ளார்.*

*இந்திய பிரஜையான குறித்த வெளிநாட்டவரை அவ்விடத்திலிருந்து மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல மஸ்கெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.*

*இந்தியாவின் மும்பையில் வசிக்கும் பாரத் சந்திரதாஸ் என்ற 25 வயதுடைய இளைஞரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.*

*காயமடைந்த நபர் இன்று (29) அதிகாலை 4.45 மணியளவில் இரத்தினபுரி –சிவனொளிபாதமலை வீதியின் ஊடாக சிவனொளிபாதமலையை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போதே இந்த விபத்துக்குள்ளாகியிருந்தார். (04)*

# தேசிய சிறுவர் நாடக விழாவிற்கு மூன்று மொழிகளிலும் விண்ணப்பங்கள் கோரல்

தேசிய சிறுவர் நாடக விழா - 2024 க்கான விண்ணப்பங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கோரும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தலைமையில், கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைப் பேரவையின் அரசநாடக ஆலோசனைச்சபை ஆகியவை இணைந்து இந்த தேசிய சிறுவர் நாடக விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

விண்ணப்பதாரர்கள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை நிரப்பி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கையளித்தல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை, அரச நாடகங்கள் ஆலோசனை சபை, கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்ரிபாய, பத்தரமுல்ல அல்லது நாடளாவிய ரீதியில் உள்ள மாவட்டச் செயலகங்களின் கலாசாரப் பிரிவுகளிலோ அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் Department of cultural Affairs என்ற முகநூல் மூலமாகவோ மற்றும் www.culturaldept.gov.lk என்ற இணையத்தளத்தினூடாகவோ பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 011-2872385 அல்லது 011-2872030 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கலாம் என கலாசார திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(ரெம-105)

# மசாஜ் நிலையத்தில் 15 வயது சிறுமியின் அழுகையை பார்த்து மனமுருகி அங்கிருந்து வெளியேறிய நபர்

## நீர்கொழும்பில் சம்பவம்

நீர்கொழும்பிலுள்ள மசாஜ் நிலையமொன்றில் சேவை பெறுவதற்காக வந்த ஒரு நபர் 15 வயது சிறுமியொருவர் கண்ணீர் மல்க கூறிய கதையை கேட்டு மனம் உருகி அங்கிருந்து வெளியே சென்ற சம்பவமொன்று நிகழ்ந்துள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உங்களுக்கு ஏதும் பிரச்சினைகள் இருந்தால் என்னிடம் கூறுங்கள், எனக் கூறி அந்த நபர் தனது தொலைபேசி எண் அடங்கிய அட்டையை அவரிடம் சிறுமியிடம் கொடுத்து விட்டு சென்றதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அதன்படி பொலிஸார் குறித்த நபரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து அவரிடம் வாக்குமூலமொன்றை பதிந்து கொண்டதாக கூறப்படுகின்றது.

‘இந்த அப்பாவிப் பெண்ணைப் பார்த்து நான் மிகவும் வருத்தப்பட்டேன். அவள் அழ ஆரம்பித்து விட்டாள்’ என அந்த நபர் பொலிஸாரிடம் நடந்த சம்பவத்தை விளக்கியுள்ளார். இந்த 15 வயது சிறுமி ஏதோ ஒரு காரணத்திக்காக வீட்டாருடன் கோபித்துக் கொண்டு வீட்டிலிருந்து வெளியேறிய போது, அவரது உறவினரொருவர் சிறுமையை மேற்படி மசாஜ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவரை விலை பேசி 15,000 ஷரூபாவிற்கு ஒப்படைத்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸாரினால் சோதனை நடத்தப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தான் இந்த சிறுமி மசாஜ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்ததால் அவர் நீண்ட காலமாக அங்கு தொழில் பார்க்கவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ரெம-106)

# பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு 2,535 ஆசிரிய உதவியாளர்கள்!

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான 2,535 ஆசிரியர் உதவியாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்களை கோருவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அடுத்த சில வாரங்களுக்குள் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதத்திற்குள், குறித்த பதவி வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு செய்து, அவர்களுக்கு அடிப்படை பயிற்சிகளை வழங்கிய பின், பாடசாலைகளுக்கு அனுப்ப எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். (04)

# யாழ் போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான அமைப்பை அமைச்சர் டக்ளஸ் திறந்தார்!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்காக கோம்பயன்மணல் இந்து மயானத்தில் உருவாக்கப்பட்ட எரியூட்டி இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (ருனேூ) கீழ் 40 மில்லியன் ஷரூபாய்நிதிப்பங்களிப்பில்அமைக்கப்பட்ட குறித்த எரியூட்டி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதில் கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையில் எரியூட்டியை அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்வதிலும் இழுபறி காணப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய யாழ் மாநகர சபை, கோம்பயன்மணல் இந்து மயான சபை என்பவற்றின் அனுமதியுடன் எரியூட்டி அமைக்கப்பட்டது. (01)



# சர்வதேச மகளிர் தினமும் மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கான இப்தார் நிகழ்வும்

(நூருல் /ஹுதா உமர்)

“அவளுடைய பலம் - நாட்டுக்கு முன்னேற்றம்” எனும் தொனிப் பொருளுடனான 114 வது சர்வதேச மகளிர் தின நிகழ்வானது, நிந்தவூர் பிரதேச செயலக வளாகத்தில் நேற்று மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கான இப்தார் நிகழ்வுடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம் அப்துல் லத்தீப் தலைமையிலும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர் றிஸ்வானுல் ஜன்னாவின் நெறிப்படுத்தலிலும் மகளிர் மகா சங்கம் மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவினரினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் உடைய 50ஃபெண்களுக்கு நிந்தவூரைச் சேர்ந்த தனவந்தர் ஒருவரினாலும் “ஊநவெநச கழச உரஅயவைையசயைெ யுஉவளைவைநைள” இனாலும் ரமழான் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ எம் சரீம், கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் பைறோஸ், திட்டமிடல் பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் பைசால், கணக்குப் பிரிவின் நிதி உதவியாளர் ஏ. நஜீப், மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் ஐ. கிஷோர் ஜஹான், சமூக சேவை உத்தியோகத்தர் முர்சித், உளவளத் துணை உதவியாளர்கள் ஹப்ரத் மற்றும் தஹ்லான், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் இம்றியாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஹஸீனா, உட்பட சமூக சேவைப் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வருடாந்த இப்தார் நிகழ்வு இடம்பெற்றது



(நூருல் /ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இப்தார் நிகழ்வு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர். எம்.பீ. அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அம்பாறை பொது வைத்தியசாலையின் சிறுநீரக பிரிவு வைத்திய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி ஸம்சுதீன் (ஹாமி) மார்க்க உபன்னியாசத்தை நிகழ்த்தினார்.

# மரநடுகையும் பிரதான நீர்க்குழாய் பொருத்தும் நிகழ்வும் திருமலை - கந்தளாய் பேரமடுவவில்



(ஹஸ்பர் ஏ.எச்)

சர்வதேச நீர் தினத்தினை (மார்ச் 22 ) முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கந்தளாய் காரியாலயம் ஏற்பாடு செய்த மரநடுகை மற்றும் புதிய பிரதான நீர்க் குழாய் பொருத்தும் நிகழ்வு நேற்று (28) இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள பிரதம அதிதியாக கலந்து கொண்டு மரநடுகையை ஆரம்பித்து வைத்ததுடன் பேரமடுவ பகுதியில் பிரதான நீர்க் குழாயும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் பாடசாலை மாணவிகள் கலந்து கொண்டு மரநடுகையில் ஈடுபட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி மற்றும் நீர் வழங்கல் சபையின் பிரதி பொது முகாமையாளர், திருகோணமலை பிராந்திய முகாமையாளர், சமூகவியலாளர், பொறியியலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# கல்முனையில் ஐந்தாவது நாளாக தொடரும் மக்கள் போராட்டம்

## மாலை மெழுகுவர்த்தி போராட்டத்திற்கு அழைப்பு!





(வி.ரி.சகாதேவராஜா)

அநீதிக்கு நீதி கோரி கல்முனையில் இன்று (29) வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாக பொதுமக்கள் போராட்டம் தொடர்கிறது. பெருமளவில் பொதுமக்கள் அடையாள அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் கடந்த நான்கு தினங்களாக எந்த ஒரு தமிழ் அரசியல் வாதியும் தங்களை பார்க்க வரவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாம் இதற்குத் தானா வாக்களிப்பது? எங்களுக்கு உரிமை பிரச்சினை ஏற்படுகின்றபோது இப்படி இவர்கள் பாராமுகமாக இருப்பது வேதனையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகிறது, என்று மக்கள் மேலும் தெரிவித்தனர்.

அரச சேவையை பெறும் தங்களின் அடிப்படை உரிமையை பறிக்கும் இனவாத அதிகார அத்துமீறலுக்கு அரசு இடமளிக்ககூடாது இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் கல்முனை தெற்கு பிரதேச செயலாளருக்கும் இனவாத அரசியல்வாதிகளுக்கும் தங்கள் கண்டனங்களை மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் அரச சேவைகளை பெறும் அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாக திட்டமிடப்பட்டு மாற்றின அரசியல்வாதிகளால் பறிக்கப்பட்டு வருகின்றமை நாடறிந்த விடயம்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் 30 வருடங்களாக தடுக்கப்பட்டு வருவதுடன் அண்மைக்காலமாக இருக்கும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டும் வருகின்றன, என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை பெறுவதற்கும் இயங்கிக் கொண்டிருக்கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அரச அதிகாரங்களை பெற்று மக்களுக்கான அரச சேவையை பெறுவதற்கு முடியாமல் கடந்த 30 வருடங்களாக தவித்துக் கொண்டிருக்கும் இப்பிரதேச மக்கள் அமைதிப்போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இதேவேளை இன்று வெள்ளிக்கிழமை மாலை மெழுகுவர்த்தி ஏற்றி போராடும் கவனயீர்ப்பு போராட்டத்தை நடாத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அனைவரும் மாலை 6 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக திரண்டு எமது ஒற்றுமையை வெளிப்படுத்தி அமைதியான முறையில் எமது போராட்டத்தினை முன்னெடுப்போம்!, என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கு தொலைபேசி உரையாடல் அறிக்கை பெறலாம்!

## நீதிமன்றம் அனுமதி வழங்கியது

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் தொலைபேசி உரையாடல் அறிக்கையை பொலிஸார் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. கடந்த 11ஆம் திகதி காரைநகர் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு ,வீடு திரும்பிக்கொண்டிருந்த தம்பதியினரை பொன்னாலை பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாமிற்கு முன்பாக வைத்து வன்முறை கும்பல் கடத்தி சென்று, கணவனை சித்திரவதைக்கு உள்ளாக்கி படுகொலை செய்துள்ளதுடன், மனைவியை வீதியில் இறக்கி விட்டு சென்றிருந்தனர். குறித்த வழக்கு நேற்று மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இறுதியாக கைது செய்யப்பட்ட மூவரின் தொலைபேசி அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக பொலிஸார் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். வட்டுக்கோட்டை இளைஞர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், கடந்த 24 ஆம் திகதி மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களும் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்றையதினம் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, 8, 9 ஆம் சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்பிற்கு உடபடுத்துமாறு பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன் பிரகாரம், எதிர்வரும் 4 ஆம் திகதி அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பொன்னாலை கடற்படை காவலரணுக்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவின் டிஜிட்டல் வீடியோ பதிவகத்தை பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர். பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்ற நீதவான் அதனை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை இளைஞர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பிலான வழக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த கொலை சம்பவம் தொடர்பாக மேலும் ஆறு பேர் தேடப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்ததுடன் குறித்த சந்தேக நபர்களுக்கு அடைக்கலமளிக்கும் வகையில் யாராவது செயல்பட்டால் அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும், என தெரிவித்தனர். (01)






## கண்டக்குழி தங்கெல பகுதியில் லொறியில் பொலிஸாரிடம் சிக்கிய பீடி இலைகளும் கடல் அட்டைகளும்



(கற்பிட்டி - சியாஜ்)

கற்பிட்டி கண்டக்குழி, தங்கெல பகுதியில் வைத்து பெருந்தொகையான பீடி இலைகள் மற்றும் கடல் அட்டைகளை நேற்று (28) கற்பிட்டி பொலிஸாரின் சுற்றி வளைப்பில் கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டக்குழி கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் 61 உறைகளும் மற்றும் கடல் அட்டைகள் 6 உறைகளூாம் கண்டக்குழி கடற்கரையிலிருந்து வெளி ஊருக்கு கொண்டு செல்லும் வழியில் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ.டப்யூ.எஸ். எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர்களான உபுல்(60960), பண்டார(59812), வண்ணிநாயக்க(80413) ஆகியோரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது இக்கடத்தல் சம்பவத்துக்கு பயன்யடுத்தப்பட்ட குளிருட்டி லொறி கைப்பற்றப்பட்டதோடு, வாகனத்தின் சாரதிகளான புத்தளத்தைச் சேர்ந்தவரும், கற்பிட்டி ஜனசவிபுரயைச் சேர்ந்தவருமாக இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பற்ற பீடி இலைகள் மற்றும் கடல் அட்டைகளின் பெறுமதி சுமார் 3.5 கோடி எனவும் மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனரெனவும் தெரிவிக்கப்பட்டது.

## இழப்பீடுகளுக்கான அலுவலகம் நெசவுத் தொழிலாளருக்கு உதவி

(வி.ரி. சகாதேவராஜா)

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மண்முனை தென் எருவில்பற்று மற்றும் மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

நெசவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த திட்டத்தின் கீழ், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவிலிருந்து 11 பயனாளிகளுக்கும், மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவிலிருந்து 2 பயனாளிகளுக்கும் அவர்களது நெசவுத் தொழில் மேம்பாட்டிற்காக 150,000 ஷரூபா பெறுமதியான நூல்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் திருமதி அனுராதி பிரேஹரா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த.நிர்மல்ராஜ், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மாவட்ட உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பயனாளிகளுடன் சந்தைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2024இல் வெளியிடப்பெற்றது.